Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 37 இதழ் - 10 அக்டோபர் - 2024

தனிப்பிரதி ரூ.10/-



## அக்டோபர் 11,12-2024 காங்கயத்தில் நடந்த 27 - ம் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி













## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கொடுத்தல் 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 20
6. கர்த்தருக்குப் பயப்படுதல் 21
7. வேதாகமம் தேவனின் பரிபூரண... 25
8. இயேசுவானவர் தேவ தூதரிலும்... 28
9. பக்திக்குரிய வாழ்வில்... 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 37 October - 2024 Issue - 10


ஆசிரியர் உரை

## தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்

ஆதிகாலந்தொட்டு தான்தோன்றித்தனமாக வாழ்ந்து பழகிவிட்ட மானிட வர்க்கத்திடம் **ஆலோசனை** என்ற உயரிய வார்த்தைக்குப் பெரிய மரியாதையோ, வரவேற்போ இல்லையென்பது ஊரறிந்த இரகசியம். தங்களுக்குப் பெரிதாக எதுவும் தெரியாவிட்டாலும், எல்லாம் தெரியும் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் தெரியும் என்ற நினைப்பு பொதுவாக எல்லோருக்குள்ளும் புரையோடிப் போயிருக்கிறது. இப்படிப்பட்ட நினைப்புக்கு விதி விலக்காக இருப்பவர்கள் வெரு குறைவே. இக்கருத்தோடு ஒத்துப் போவதற்குப் பெரிதாக சிரமம் இருக்காது என்று நம்புகிறேன். ஆலோசனை என்ற வார்த்தைக்கான பரவலான பொருள் **புத்திமதி** என்பது. இந்த புத்திமதி யாருக்குமே எதற்கும் தேவையில்லையென்பது யதார்த்த நிலையாக இருந்திருக்குமானால், நம் தமிழ் அகராதியில் **ஆலோசனை** என்ற வார்த்தைக்கே அவசியமில்லாமல் போயிருந்திருக்கும். ஆனால், வேதாகம காலந்தொட்டு இவ்வார்த்தை வழக்கத்திலும், புழக்கத்திலும் இருந்து வருகிறபடியால், ஆலோசனையாகிய புத்திமதி மானிடத்திற்கு அவசியமென்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இப்படி, மானிடத்திற்கு முற்றிலும் அவசியமாயிருக்கும் ஆலோசனையின் இருப்பிடமாகவும். பிறப்பிடமாகவும் பரலோகத்தின் தேவனும், அவருடைய ஏக குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இருக்கிறார்கள். இவ்வுண்மை பற்றி, முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர் என்று வேத அறிஞர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பழம்பெரும் பக்தனாகிய யோபு கூறுகையில், **அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத் தான் ஆலோசனையும், புத்தியும் உண்டு** (யோபு 12:13) என்று வியந்து கூறுகிறார். மேலும், இயேசு ஆண்டவரின் மானிட பிறப்பு குறித்துப் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனம்

உரைத்த பழைய ஏற்பாட்டுப் பவுலடியார் என்று போற்றப்படும் ஏசாயா, **நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும்** (ஏசாயா 9:6) என்று வர்ணித்திருக்கிறார்.

இன்னும், தேவன் தம்முடைய ஆலோசனையின்படி தான் எல்லா வற்றையும் நடப்பிக்கிறார் என்று பவுலடியார் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். **மேலும், கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி, தமது சித்தத்தின் ஆலோசனைக் குத்தக்கதாக எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்** என்கிறார் (எபே. 1:11,12). இந்த வசனங்களெல்லாம் பரலோக ஆலாசனையின் மகத்துவத்தை நமக்கு எடுத்துரைப்பதாகவே உள்ளன.

இப்படி மகத்துவம் நிறைந்த தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றைத் தான் இயேசுவின் பூலோக வாழ்க்கையின் காலத்தில் வாழ்ந்த யூதர்களின் ஒரு கூட்டத்தார் தள்ளியிருக்கிறார்கள். இது குறித்து லூக்கா நற்செய்தியாளர், **பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்** (லூக் 7:30) என்று கூறியுள்ளார். தள்ளிவிட்டார்கள் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், தள்ளுவதால் நேரும் பாதிப்பு என்ன என்பதையும் தெளிவாக்கிவிட்டார். அதாவது, தேவ ஆலோசனையைத் தள்ளுபவர் களுக்கு கேடு உண்டாகும் என்று. தேவனிடத்திலிருந்து கேடு வந்தால் தாங்குமா?.

சரி, தொடர்ந்து நாம் மேலே சென்று, தேவனுடைய ஆலோசனையை ஏன் தள்ளிவிடக் கூடாது என்பதை அறிந்து கொள்வதற்கு முன், இப்படி எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பது குறித்து நமது ஆசானின் வழக்கப்படி பார்த்து விடுவோம்.

தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் என்று விளம்பப்பட்ட நாட்கள் இரட்சகராகிய இயேசுவானவர் கலிலேயாவிலும், அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் யூதேயாவிலும் நற்செய்தி அறிவித்துக் கொண்டிருந்த காலகட்டம். இயேசுவானவர் கலிலேயாவின் நாசரேத்து, கப்பர்நகூம், நாயீன் போன்ற ஊர்களில் அநேக அற்புதங்களை நடப்பித்து, வல்லமையோடு ஊழியம் செய்து கொண்டிருந்த சமயம் அது. அதன் உச்சமாக, மரித்து, பாடையிலே வைக்கப்பட்டு, அடக்கம் பண்ணுவதற்கு சுடுகாட்டிற்கு

ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட நாயீன் ஊர் விதவையின் ஒரே மகனை, அந்த விதவையின் கண்ணீரைக் கண்டு, மனதுருகி பாடையைத் தொட்டு, வாலிபனே, எழுந்திரு என்று சொல்லி, அந்தத் தாயிடம் மகனை மீண்டும் ஒப்படைத்தார் [லூக். 7:11-15].

பாடையில் கிடந்தவன் எழுந்து, உட்கார்ந்து, பேசினதைக் கண்ட ஜனங்கள் பயமடைந்து, **மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்** என்று சொல்லித் தேவனை மகிமைப் படுத்தினார்கள். இச்செய்தி காட்டுத் தீ போல மள மளவெனப் பற்றி தேசமெங்கும் பரவியது. வடக்குப் பகுதியாகிய கலிலேயாவின் எல்லைகளைக் கடந்து தெற்குப் பகுதியாகிய யூதாவுக்கும் வந்து சேர்ந்தது. அந்நாட்களில் யோவான் அங்குதான் ஊழியம் செய்து வந்தார். அவருடைய காதுகளுக்கும் அவருடைய சீடர்கள் வழியாய் இச்செய்தி போய்ச் சேர்ந்தது. அப்பொழுது யோவான் தன் சீடரில் இரண்டு பேரை அழைத்து, **வருகிறவர் நீர் தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?** என்று இயேசுவிடம் கேட்டு வரும்படி அனுப்பினார் [லூக். 7:17-20]. இயேசுவானவர் இதற்கு நேரிடையாகப் பதிலளிக்காமல், **நீங்கள் போய், கண்டவை களையும், கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக் கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது** [லூக். 7:22] என்று சொல்லியனுப்பினார்.

யோவானால் அனுப்பப்பட்ட சீடர்கள் சென்ற பிறகு, தன்னோடிருந்தவர்களிடத்தில் யோவானை வெகுவாகப் புகழ்ந்தார். **இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவார் என்று தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர்** [மல்கியா 3:1] இவர் தான் என்று சொன்னதோடு நிற்காமல், **ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை** [லூக். 7:28] என்ற மாபெரும் உண்மையையும் வெளிப்படுத்தினார். இந்த யோவான் ஊழியம் செய்த நாட்களிலே தான், அவருடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். ஆனால், அதே யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட, பரிசேயரும், நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் [லூக். 7:30].

இவ்வசனத்தில், ஞானஸ்நானமானது **தேவனுடைய ஆலோசனை** என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. யோவான் பிரசங்கித்த தேவ ஆலோசனையாகிய ஞானஸ்நானத்திற்கு, பாவிகளென்று முத்திரையிடப்பட்ட

ஆயக்காரரும், தேவக்காரியங்களில் பெரிதாக ஒன்றும் அறியாதவர்களென்று கருதப்பட்ட சராசரி யூதர்களும் தங்களைக் கீழ்ப் படித்தியிருக்கும் போது, இஸ்ரவேலில் போதகர்களென்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, முன்னோர்களின் பாரம்பரியத்தில் அபார பிடிப்புக் கொண்டவர்களென்று அங்கீகரிக்கப்பட்ட பரிசேயர்களும், மோசேயின் பிரமாணங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் என்று நினைக்கப்பட்ட நியாய சாஸ்திரிகளும் ஞாஸ்நானமாகிய தேவ ஆலோசனையை ஆகாதென்று தள்ளிவிட்டார்கள் நிலைமை எப்படியிருக்கிறதென்று பாருங்கள்! தேவ ஆலோசனையைத் தள்ளிவிடுவார்கள் என்று எண்ணப்பட்டவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், வேத அறிவு இருக்கிறது. ஆகவே, ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்க்கப் பட்டவர்கள் தள்ளி விட்டார்கள்! இது எப்படியிருக்கு? இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது நம்முடைய நாட்களிலும் இதுதானே நடக்கிறது என்று சொல்லுகிறீர்களா? அதுவும் சரிதான்.

அன்பானவர்களே, தங்களைப் போதகர்களென்றும், வேதம் அறிந்தவர்களென்றும் நினைத்தவர்கள் தேவ ஆலோசனையாகிய ஞானஸ்நானத்தைத் தள்ளி விட்டதைப் பரிசுத்த ஆவியானவர் ஒரு குற்றமாகவே அங்கு குறிப்பிட்டிருக்கிறார். அப்படித் தள்ளியதன் மூலம தங்களைத் தண்டனைக்கு ஏதுவானவர்களாக மாற்றிக் கொண்டார் களென்றும் அறிவித்திருக்கிறார். அப்படியானால் எதற்காக இந்த அறிவிப்பு? நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவ ஆலோசனையைத் தள்ளி, தண்டனைக்கு ஏதுவானவர்களாக மாறிவிடக்கூடாது என்பது தானே அதன் நோக்கம். நாம் புரிந்து செயல்படத்தயாரா?

இப்பொழுது, நம்முடைய வாழ்க்கையில், நாம் ஒவ்வொருவரும் எந்தவொரு தேவ ஆலோசனையையும் ஏன் தள்ளிவிடக்கூடாது என்பதற்கான ஒரு மூன்று காரணங்களை இங்கே பார்க்கலாம்.

**I மனிதனுடைய வழிகள் போதுமானதல்ல**

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தகாது என்பதற்கான காரனங் களில், முதலாவதாக நாம் தெரிந்து கொள்வது, மனிதனுடைய வழிகள் நமக்குப் போதுமானதல்ல என்பது.

மனிதர்களுக்கு சக மனிதர்களின் ஆலோசனை ஒருபோதும் தேவையில்லை என்று வேதாகமம் ஒருபோதும் சொல்லுவதில்லை. ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் கூறும்போது, **ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்** (நீதி. 11:14) என்று கூறியுள்ளார். இங்கு சொல்லப்படும் ஆலோசனை, மனிதர்களின் சுக வாழ்வுக்கு மனிதர்களால் தங்களுடைய அறிவைக் கொண்டும், அனுபவத்தைக் கொண்டும் கொடுக்கப்படும் ஆலோச னைகள். இந்த ஆலோசனையை ஒருவன் தள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம். ஏற்படும் பாதிப்பு நன்மையாக இருந்தாலும்,

தீமையாக இருந்தாலும் சரீர வாழ்வோடு முடிந்து போகும். ஆனால், நம்முடைய தலைப்பில் இடம் பெற்றிருப்பது மனிதர்களின் அடுத்த வாழ்வுக்குத் தேவையான தேவ ஆலோசனை, இந்த ஆலோசனையைத் தான் ஒருவன் தள்ளக்கூடாது என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஏனெனில், மனிதனுடைய ஆலோசனைகளும் வழிகளும் மனிதனுடைய இம்மையின் வாழ்வுக்கும், மறுமையின் வாழ்வுக்கும் போதுமானதல்ல எரேமியா தீர்க்கனுடைய நாட்களில், தங்கள் வாழ்வுக்குத் தங்கள் வழிகளே போதுமென்ற நினைப்போடு மக்கள் வாழ்ந்தார்கள். அங்கே தீர்க்கள் கூறும் வார்த்தைகளை கவனியுங்கள். **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல வென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கினாலே ஆகிறதல்ல வென்றும் அறிவேன்** [எரே. 10:23], மேலும், நீதிமொழிகள் புத்தகம் இதைவிட அழுத்தமான பொருளில் மனிதனுடைய வழிகள் பற்றிப் பேசுகிறது. மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் [நீதி. 14:12] என்று. மனிதனுடைய ஆலோசனையின் தன்மையும், வழிகளின் இலட்சணமும் இதுவாக இருக்கும் போது. நாம் தேவ ஆலோசனையை ஏற்றுக் கீழ்ப்படிய ஏன் தயங்க வேண்டும் அல்லது மறுக்க வேண்டும்?

சிலுவைக்கு முன்னால், யோவான் ஊழியம் செய்த நாட்களில் ஞானஸ்நானம் தேவ ஆலோசனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சிலுவைக்குப் பின்னால், இயேசு பரமேறுவதற்கு முன்பாக, அதே ஞானஸ்நானமானது ஒரு கட்டளையாகக் கொடுக்கப் பட்டுள்ளது. ஆம், பிரதான கட்டளையின் ஊடே ஞானஸ்நானம் இடம் பெற்றிருக்கிறது. **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர் களுக்கு உபதேசம் பண்ணுங்கள்** என்று [மத். 28:19,20] ஆலோச னைக்கும், கட்டளைக்குமுண்டான வேறுபாடு உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். [1கொரி 7:6] ஆலோசனைக்குக் கீழ்ப்படியாவிட்டாலே **கேடு** என்றால். கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால்? சும்மா விடுவாரா தேவன்? ஆகவே, தேவ காரியங்களில் ஜாக்கிரதை மிகவும் அவசியம்.

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய பூமிக்குண்டான வாழ்வுக்கும், பரலோக வாழ்வுக்கும் தேவனால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் ஆலோசனைகள் எதுவாக இருந்தாலும், **கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்** என்ற சாமுவேல் பிள்ளையாண் டானின் மனநிலையைப் பெற்றவர்களாய், **ஆயக்காரர்களைப் போல** நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்போடு பக்தி வாழ்க்கையை நடத்தி, கடிந்து கொள்ளுதலுக்கு ஆளான பரிசேயர்கள் போலும், நியாயசாஸ்திரிகள் போலும் நாம் மாறிவிடக் கூடாது.

## II போவதற்குப் போக்கிடம் எதுவுமில்லை

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தாகாது என்பதற்கான காரணங்களில், இரண்டாவதாக நாம் தெரிந்து கொள்வது, பரலோகத்தின் தேவனையும், இரட்சகர் இயேசுவையும் தவிர வேறுவழியில்லை என்பது.

பொதுவாக, எந்த ஒரு காரியத்திற்கும் மாற்றுவழி என்று ஒன்று இருக்குமானால் போதாத நேரத்தில் அதை நாம் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால், வேறு எவதுமே இல்லை, இருப்பது ஒன்றே ஒன்று தான் என்ற நிலை காணப்படுமானால் அதை ஏற்றுக் கொள்வது தானே புத்திசாலித்தனம். அதைத்தானே அறிவுள்ள ஒருவன் செய்ய வேண்டும். இந்த உண்மையைத்தான் இயேசுவின் சீடர்கள் ஒரு கட்டத்தில் அறிக்கையிட்டார்கள்.

ஆம், ஒரு சமயம் இயேசுவானவர் தன்னைப் பின்பற்றின திரளான சீடர்களிடம், **நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்** என்று கூறி [யோவான் 5:51] அதன் விளக்கமாகப் பல காரியங்களை எடுத்து ரைத்தார். அப்பொழுது அவருடைய சீடரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்று சொன்னதோடு, அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கியும் போனார்கள். [யோவான் 6:60-66], அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி, நீங்களும் போய்விட மனதாயிருக் கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்திரமாக ஆண்டவரே. **யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்** என்றான் [யோ 6:66,68].

நம்முடைய மறுமையின் வாழ்வுக்கு வழிகாட்டும் நித்திய ஜீவ வசனங்கள் இயேசுவினிடத்தில் இருக்கிறபடியால் இயேசுவைத் தவிர வேறு எங்கும் போக முடியாது. இதே உண்மையைத் தான் பேதுரு மற்றொரு சமயத்தில் இப்படியாக வெளிப்படுத்தியுள்ளார். **அவராலேயன்றி வேறொருவராலும்** இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை' என்றார் [அப், 4:12] எபிரெயர் ஆசிரியர் இதையே வேறொரு கோணத்தில் எங்ஙனம் எடுத்துரைக்கிறார் என்று பாருங்கள். **சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினி மித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்..** என்றுள்ளது [எபி. 10:26]. மனிதர்களின் பாவங்களுக்கான ஒரே பலி இயேசுக் கிறிஸ்து தான். மனிதர்களின் பாவங்களுக்காகச் செலுத்துவதற்கு வேறொரு பலியும் இல்லை, நித்திய வாழ்வுக்கு இயேசுவைத் தவிர வேறு வழியும் இல்லை. இது குறித்து இயேசு ஆண்டவர நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும்

பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்று சொல்லி விட்டாரே.

மேலும், பவுலடியார் தீமோத்தேயுவிற்கு எழுதும்போது, சரீர முயற்சி அற்பபிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று கூறுகிறார். (I தீமோத். 4:8). அதாவது தேவனுடைய வார்த்தைகளின் மூலம் வருகின்ற **தேவ பக்தியானது** இம்மைக்கும், மறுமைக்கும் போதுமானதாக உள்ளது என்று.

ஆக அருமையானவர்களே, தேவனும் அவருடைய வார்த்தைகளும் தேவனும், அவருடைய குமாரனின் காரியங்களும் இம்மைக்கும், மறுமைக்கும் போதுமான வைகளாக இருக்கும்போது தேவன் நமக்குக் கொடுக்கும் ஆலோச னையை நாம் ஏன் தள்ள வேண்டும்? இப்பூமியிலே நாம் தனி நபராகவும், குடும்பமாகவும், சபையாகவும் வாழ்வதற்கான ஆலோசனைகளைத் தமது ஆவியானவர் மூலமாகத் தாராளமாகவும், ஏராள மாகவும் தந்திருக்கிறார். அத்தோடு மறுமையை என்றென்றும் அவரோடு எப்படிக் கழிப்பது என்பதற்கான ஆலோசனைகளையும் தந்திருக்கிறார். ஆகவே, அவைகளை நாம் எக்காரணம் கொண்டும் தள்ளாமல், அவைகளுக்கு நம்மை சமூலமாக ஒப்புக்கொடுத்து வாழ்வது அவசியம்.

**III தண்டனை கடுமையாக இருக்கும்**

தேவ ஆலோசனையைத் தள்ளுவது தாகாது என்பதற்கான காரணங்களில் மூன்றாவதாக நாம் தெரிந்து கொள்வது, தண்டனை கடுமையாக இருக்குமென்பது.

நம்முடைய தலைப்பு இடம் பெற்றிருக்கும் வேத வசனம், **பரிசேயர்களும் நியாயசாஸ்திரிகளும் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவ ஆலோசயையைத் தள்ளி விட்டார்கள்** என்று கூறுகிறது. அதாவது, அப்படித் தள்ளியதால் தேவ தண்டனை அவர்களுக்கு உண்டு என்று கூறுகிறது. தேவன், ஆதியிலிருந்தே தான் சொல்லுகிறபடி மனிதன் செய்கிறானா என்பதைக் கவனிக்கிறவராகவே இருக்கிறார். அப்படிச் செய்யாத பட்சத்தில் தண்டிக்கிறவராகவும் இருக்கிறார். இந்த அணுகு முறையை அவர் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பித்துவிட்டார். ஆதாம், ஏவாள் தம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி இருக்கிறார் (ஆதி 9:23,24)

அடுத்து, மோசேயின் நாட்களில், தேவன் கொடுத்த ஓய்வு நாள் பிரமாணத்திற்கு எதிராக, இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரத்தில் இருந்த போது ஒரு மனிதன் விறகு பொறுக்கி விட்டான். அவன் விறகு வெட்டவில்லை. வெறுமனே பொறுக்கினான். அவ்வளவு தான் ஆனாலும், அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? பாளையத்திற்குப் புறம்பாக்கப்பட்டு கல்லெறிந்து கொல்லப்பட்டாள். (எண். 15:32,36), இன்னும், சிலுவைக்குப் பின்னான புதிய ஏற்பாட்டுக்

காலத்தில் தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகப் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் இருவரும் அடுத்தடுத்து மரித்துப் போனார்கள். (அப். 5:5,10), தேவனுடைய ஆலோசனைகளுக்கும். அவருடைய வார்த்தைகளுக்கும் அவர் எவ்வளவு முக்கியத்துவம் தருகிறார் என்று அதன் மூலம் விளங்குகிறதா, இல்லையா? சொல்லுங்கள்.

இந்த உண்மைகளையெல்லாம் எபிரெயர் ஆசிரியர் அறிந்த படியால்தான் ஆவியானவரின் துணை கொண்டு அந்நூலின் வாசகர் களுக்கு எச்சரித்துப் புத்தி சொல்லியிருக்கிறார்... அடையாளங் களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் என்று (எபி.2:4). இந்நூலின் ஆரம்பத்தில் இப்படிச் சொல்லுகிறவர், இதன் நிறைவுப் பகுதிக்கு வரும்போது. **பழி வாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயத்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே** என்கிறார் (எபி. 10:31).

அன்பானவர்களே, இந்த வசனங்களையெல்லாம் கவனிக்கும் போது பயமாக இல்லையா? ஆம், பயமாகத்தான் இருக்கிறது என்று சொல்லுவோமானால் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய வழிகளுக்கும் நாம் என்ன மரியாதை கொடுக்கிறோம்? என்னுடைய பக்தி காரியங்கள் தேவ ஆலோசனைப்படி அமைந்திருக்கிறதா, என்னுடைய பக்தி வாழ்க்கை தேவ வார்த்தைகளுக்கு ஒத்து வருகிறதா. என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை புதிய ஏற்பாட்டிலுள்ள கிறிஸ்துவின் உபதேசப்படி இருக்கிறதா என்று நாம் எப்பொழுதாகிலும் எண்ணிப் பார்த்தோமா? சொல்லுங்கள்.

தேவக் காரியங்களைத் தள்ளிவிட்டு நாம் தப்பித்துவிடலாம் என்று எண்ணி நாம் ஏமாந்து போய்விட வேண்டாம். **ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.** (2 கொரி. 5:10). ஆகையால், இந்த உண்மையைப் புரிந்து தேவக் காரியங்களுக்கு, குறிப்பாக தேவ ஆலோசனைகளுக்கும். கட்டளைகளுக்கும் நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்த முடிவெடுப்போம்!

பரலோகத்தின் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

# கொடுத்தல்

**சகோ. சோட்**

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

***கொ***டுத்தல் பற்றிய மற்றொரு வசனப்பகுதியைப் பார்ப்போம். II கொரிந்தியர் 9: 6,7 வசனங்களில் அவை காணப்படுகின்றன : 'பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.' இப்போது கீழ்க்கண்ட குறிப்புகளைக் கவனியுங்கள் :

1. நாம் விதைத்திருப்பதற்கு ஏற்ப அறுவடை செய்வோம் என அவர் கூறுகிறார். நாம் சிறுக விதைத்தால் சிறுக அறுப்போம். நாம் அதிகமாக விதைத்தால் அதிகமாக அறுவடை செய்வோம். விவசாயத்திலும், தொழிலிலும், இன்னும் வாழ்வின் சகல துறைகளைப் பொருத்தவரையிலும் இது உண்மை. கர்த்தருடைய காரியத்திலும் இது உண்மையாக இருக்கிறது. நாம் அதிகமாகக் கொடுத்தால் அதிகமாகப் பெற்றுக் கொள்ளுவோம். பல மக்கள் ஒரு போதும் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்குக் காரணம், அவர்கள் ஒன்றையும் ஒருபோதும் கொடுப்பதில்லை. ஒன்றும் கொடுக்காமல், பெற்றுக் கொள்ள முடியாது. நம்மில் பலர், கர்த்தருடைய வார்த்தையை முற்றிலுமாக நம்புவதில்லை என நான் அஞ்சுகிறேன். நாம் அவரை சோதித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு செய்தால், நாம் அதிகமாகக் கொடுக்கும்போது அவர் இன்னும் மிக அதிகமாகத் தருகிறார் என்பதை நாம் கண்டுகொள்ள முடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.

2. தன் தன் வரவுக்குத் தக்கதாக மனதில் நியமித்தபடியே ஒவ்வொருவனும் கொடுக்கவேண்டும் என அவர் சொல்லுகிறார். நாம் எவ்வளவு கொடுக்கப் போகிறோம் என்பதை ஆராதனைக்கு வரும் முன்பே நாம் மனதில் நியமித்துக் கொள்ள வேண்டும். இதைத் தான் அவர் சொல்லுகிறார். காணிக்கை தட்டு உங்கள் முன்பு நீட்டப்படும் வேளைவரை அதைப்பற்றிய சிந்தனையின்றி இருந்துவிட்டு, பின்னர் அவசரமாக தட்டுத்தடுமாறி கையில் அகப்பட்ட காசை தட்டில் போடுவது சரியல்ல. ஆகையால் நீங்கள் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை மனதில் நிச்சயித்துக் கொண்டு அவ்வாறே கொடுங்கள்.

3. விசனமாகவோ கட்டாயமாகவோ ஒருவன் கொடுக்கக் கூடாது என அவர் சொல்லுகிறார். அதாவது, யாருடைய கட்டாயத்திற்காகவோ நீங்கள் கொடுப்பதாக உணர்ந்து கொண்டு கொடுக்கத் தேவையில்லை. உண்மையிலேயே நீங்கள் கொடுக்க விரும்பாமல் வேறு ஒரு காரியத்திற்காக அந்தப் பணத்தை உங்களிடம் வைத்துக் கொள்ள விரும்பிய நேரத்தில், கொடுக்க வேண்டிய சூழ்நிலை காரணமாக நீங்கள் கொடுக்கும் பட்சத்தில். உங்களைப் பொருத்த வரையிலும் சரி, கர்த்தரைப் பொருத்த வரையிலும் சரி, அவ்வாறு நீங்கள் கொடுத்தது விருதா.

4. கொடுக்காமலிருக்க முடியாதே என்ற உணர்வோடு, ஒருவன் கொடுக்கக் கூடாது என கர்த்தர் கூறுகிறார். ஏனெனில், கொடுக்க வேண்டியதாகிவிட்டதே என நீ கவலைப்படும் நிலைக்கு உன்னைக் கர்த்தர் தள்ளிவிட முயற்சிக்கவில்லை. நிச்சயமாக இல்லை.

5. மாறாக, மகிழ்ச்சியுடன் கொடுப்பவனை அவர் நேசிக்கிறார். நீ எவ்வாறு கொடுக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்? நீ மகிழ்ச்சியாகக் கொடுப்பதையே அவர் விரும்புகிறார். ஏனெனில் நீ கொடுப்பதில் மகிழ்ச்சியடைவதை அவர் பார்க்கிறார். இப்படிக் கொடுப்பவர்களாகவே நாம் எப்போதும் இருக்க வேண்டும்.

இறுதியாக, கர்த்தர் தாமே கூறியதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோம் **...வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.** (அப். 20:35). ஆனால், பலர் இந்த வசனத்தை மாற்றி அமைத்து. **கொடுப்பதைப் பார்க்கிலும் வாங்குகிறதே பாக்கியம்** என்பதாக நடந்துகொள்ளுகின்றனரோ என நான் ஐயப்படுகிறேன். ஏன்? ஏனெனில் நம்மில் பலர் பேராசையும், கஞ்சத்தனமும், சுயநலமும் உள்ளவர்களாக இருப்பதால், தேவனுக்கு உரிமையுடன் சேர வேண்டியதை நாம் திருடிக் கொள்ளுகிறோம். நாம் விழித்தெழுந்து, உண்மையில் தேவனுக்குச் சொந்தமானதிலிருந்து நாம் எடுத்து வைத்துள்ள பங்கை அவரிடமே திருப்பி அளித்திட தேவன் தாமே நமக்கு உதவுவாராக! வசனத்தின்படியாக கொடுப்பது எப்படி என்பதை நாம் கற்றுக் கொள்ளாத வரையில், கிறிஸ்தவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி ஒரு போதும் இருக்க முடியாது.

✝

பெண்கள் பகுதி

# அடையாளம், ஞானம், சிலுவை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ஸ்தோத்திரம். இம்மாதமும் தேவனுடைய வார்த்தைகளை நாம் சேர்ந்து படிப்பதற்கு அவர் அழித்த கிருபைகளுக்காய் அவருக்கு ஸ்தோத்திரம்.

யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் (கொரி.1 :22,23). இந்த வசனப் பகுதி அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு நிருபம் எழுதும்போது குறிப்பிடுகிறார். முதலாவதாக, வேத வசனங்கள் எல்லாம் தேவனுடைய ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். ஏதோ பவுல் சொந்தமான கருத்துக்களை எழுதியிருக்கிறார் என்று எண்ணாமல் தேவன் பவுலைக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நிருபம் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதப்பட்டது. இந்த சபை அப்.பவுலாலே ஆரம்பிக்கப்பட்டது. தன்னுடைய மூன்று சுவிசேஷ பயணங்களுள் இரண்டாவது பயணத்தின் போது அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வந்து சேருகிறார். தனியாக முற்றிலும் அறிமுகமில்லாதவனாக கையில் போதிய பணம் இல்லாதவனாக இந்த பட்டணத்திற்குள் காலெடுத்து வைக்கிறார். மக்க தொனியாவிலிருந்து கொண்டு வந்த கொஞ்ச தொகையும் தீர்ந்து போகவே தன்னுடைய சொந்த தேவைகளை சந்திக்க என்ன செய்வது என்று சிந்திக்கலானார். இப்படியிருக்கும்போது, அவன் ஆக்கில்லா என்றும் நாமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ் கில்லாலையும் அங்கே கண்டு அவர்களிடத் திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளி களாயிருந்தார்கள். தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி வேலை செய்து கொண்டு வந்தான் (அப். 8:1,2,3).

கொரிந்து பட்டணம் தனசம்பத்தும் பெருங்கீர்த்தியுள்ளதும், அதிலுள்ளவர்கள் அக்காலத்து நாகரீகத்தில் பேர் போனவர் களாயும் இருந்தார்கள். கிரேக்க தேசம் கொரிந்து பட்டணத்தால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கொரிந்து ஒரு துறைமுகப் பட்டணம். இத்தாலியாவுக்கும் சின்ன ஆசியாவுக்கும் ஜனங்கள் போக்குவரத்தாயிருந்தபடியினால் கொரிந்து பட்டணத்தில் வியாபாரம் அதிகமாய் நடந்தது. மேலும், உலகத்தில்

பிரஸ்தாபமுள்ள சர்வகலாசாலை இருந்ததினால் பல தேசங்களிலுமிருந்து கல்வி கற்கும்படி அநேக மாணாக்கர் அங்கு வருவார்கள். கொரிந்து பட்டணத்தின் விபரங்களை இதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

இப்படியொரு இடத்திற்குத்தான் அப். பவுல் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபிப்பதற்காக ஊழிய பாரம் உள்ளவராய் வந்து சேருகிறார். அங்கிருந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போதுதான், யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள் நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என்கிறார்.

இந்த யூதர்கள் இருக்கிறார்களே அவர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் கேட்பார்கள். இப்படியே இவர்கள் பயிற்றுவிக்கப்பட்டும் போனவர்கள். ஒரு பேருண்மையை ஒரு ஆசிரியர் நிலைநாட்ட வேண்டுமென்று நினைத்தால் அவர் ஒரு சோதனையைச் செய்து காட்டியாக வேண்டும். நமதாண்டவராகிய இயேசு நமக்காக இந்தப் பூலோகத்திற்கு வந்து வாழ்ந்து 3½ ஆண்டுகள் போதனைகள் செய்தபோது பரலோகத்தின் பேருண்மைகளையும் வரப்போகிற இராஜ்ஜியத்தையும் குறித்து போதனைகளைச் செய்தபோது தன்னைச் சுற்றிலுமிருந்த யூதர்கள் எப்போதுமே அடையாளங்களையே கேட்பார்கள். உதாரணமாக (மத்.12:36,37) ல் பார்க்கும்போது இயேசு கிறிஸ்து நம் பேசும் வார்த்தைகள் நம்மை நியாயந்தீர்க்கிறது என்று போதிக்கும்போது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி ; போதகரே உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்கிறார்கள் (12:38). மேலும், மத். 16:1-ல் பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து வானத்திலிருந்து நீர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள். இயேசு பதிலுக்கு யோனாவின் அடையாளமேயன்றி வேறொரு அடையாளம் உங்களுக்கு இல்லை என்பார். அதாவது, தன்னுடைய மரணம், உயிர்த்தெழுதல் பற்றித்தான் அவருடைய போதகமே இருந்தது.

மேலும் 8:11 - லும் ஏழு அப்பம் சிறு மீன்களையும் வைத்து நாலாயிரம் பேரை போஷித்த பிறகு பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள் என வாசிக்கிறோம்.

மேலும், யோவான் 4:48 - லும் இதைத்தான் பார்க்கிறோம். சமாரியாவிலுள்ள சீகார் ஊரிலே அங்குள்ள ஸ்திரீயிடம் தாகத்துக்குத் தா என்று கேட்டு பிதாவை எங்கும் தொழுது கொள்ளும் காலம் வரை பேசிவிட்டு வந்து கொண்டிருக்கும் இயேசுவிடம் தன் மகனை குணமாக்க வர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட அந்த மனிதரிடம் அப்பொழுது இயேசு அவனை நோக்கிநீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். இவன் கேள்வி ஒன்று இயேசுவின் பதில்

ஒன்று. பன்மையில் பதில் அளிக்கிறார். ஆக யூதர்கள் எப்போதும் அடையாளங்களையும் அற்புதங்களையும் எதிர்பார்த்தே இருந்தார்கள். ஒருகாரியத்தை நம்புவதற்கு இவைகள் யூதர்களுக்குத் தேவைப்பட்டது. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

சரி,கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். இவர்கள் தத்துவங்களுக்கு சொந்தக்காரர்கள். யூதர்களுக்கு வேண்டிய அடையாளங்களும் அற்புதங்களும் கொடுக்கப்பட்டும் அவைகள் அவர்களை திருப்திபடுத்தவில்லை. நேர்மாறாக, கிரேக்கர் இவைகளை விரும்பாமல் ஞானம் வேண்டும் என்று அலைந்தார்கள். எந்த ஒரு காரியத்தையும் அவர்களுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுதல் உட்பட உலக ஞானத்திற்குத்தான் முதலிடம் கொடுத்தார்கள். ஒவ்வொரு காலத்திலும் தங்கள் சுயஞானத்திற்கேற்ப தெய்வங்கள் ஏற்படுத்தி வழிபட்டுக் கொண்டுதான் வருகிறார்கள்.

அப். பவுல், அத்தேனே பட்டணத்தில் தினந்தோறும் சம்பாஷனை பண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் பவுலோடே வாக்குவாதம் பண்ணி இந்த வாயாடி என்ன பேசுகிறான் என்றார்கள். இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தது அந்நிய தேவதைகளை அறிவிக்கிறதாகக் காணப்பட்டது. மேலும், மார்ஸ் மேடைக்கு பவுல் சென்றபோது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலி பீடத்தைக் கண்டேன். எங்கே தாங்கள் அறியாத ஒரு தேவன் இருந்து அவரை வணங்காவிட்டால் குற்றம் வந்து விடுமோ என்று நினைத்து இப்படியும் ஒரு பலிபீடத்தை கட்டிவைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் ஞானம் எப்படியிருந்திருக்கும் என்று பாருங்களேன். ஆக, கிரேக்கர் அப் பவுலுக்குச் செய்த கொடுமைகளை நாம் அப்.18ம் அதிகாரத்தில் படிக்கலாம்.

இருப்பினும், பவுல் கொரிந்து பட்டணத்தில் கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினான். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் 1டி ஆண்டு அங்குதங்கி தேவ வசனத்தை உபதேசித்துக்கொண்டு வந்தான். தன்னால் உபதேசிக்கப் பட்டவர்களின் மத்தியில் உள்ள பிரச்சனைகளால்தான் இவ்வாறாகப் பேசுகிறார். பவுல் நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கிக்கிறோம் என்கிறார்.

பிரியமானவர்களே! இயேசு ஏன் சிலுவையில் அறையப்பட வேண்டும்? சிலுவையில் அவர் சிந்தின இரத்தம்தான் நம்மை தேவனோடு சேர்க்கிறது. அவர் சிலுவையில் மதித்து உயிர்த்தெழுந்த தினால்தான் நமக்கு இரட்சிப்பு கிடைத்தது. நாம் தண்ணீருக்குள் சென்று பாவத்துக்கு மரித்து அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்தானத்தினாலே கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டு வெளியே வரும்போது அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நமக்கு இரட்சிப்பு வேண்டும் என்பதற்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார். இன்றைக்கும்

இதே பிரசங்கம்தான் தேவைப்படுகிறது. அப் 2ம் அதிகாரத்தில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்ட 3000 பேர்களால் முதல் முதல் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

அன்றைக்கு எப்படி யூதர்களுக்கு அடையாளம் தேவைபப்பட்டதோ? கிரேக்கர்களுக்கு ஞானம் தேவைப்பட்டதோ அதேபோல்தான் இன்றும் மக்கள் இயேசுவை பல்வேறு காரணங்களுக்காக தான் தேடுகிறார்கள். கிறிஸ்துவின் உண்மையான எளிமையான உபதேசம் அநேகருக்கு இன்றும் இடறலாகவும், பைத்தியமாகவும் தோன்றுகிறது. வேறு ஒரு சத்தியம் இல்லை. உண்மையில், ஒருவர் பரலோகத்தைச் சுதந்தரிக்க வேண்டுமென்றால் வேதாகமம் கூறுகிறபடி இன்னும் சொல்லப் போனால், இயேசுவின் உபதேசம் அப்போஸ்தலர்களின் உபதேசம் இவைகளை தேடிப் படித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். வேதத்தில் எழுதியிருப்பதை விடுத்து எந்த ஒரு வெளிப்பாடும் இல்லை. வெளிப்பாடு வேண்டும் என்று அலைந்தால் அது பைத்தியகாரத்தனம் தான்.

அன்பானவர்களே! தேவன் நம் வாழ்வில் ஒவ்வொரு வருடத்தையும் கிருபையாய் கூட்டிக் கொடுத்து வருகிறார். இந்த காலத்தைப் பிரயோஜனப்படுத்தி நம் பாரம்பரியம், வேதம் சொல்லாத ஆராதனை முறை, பாட்டு, கர்த்தருடைய பந்தி, கர்த்தருக்குக் கொடுப்பது போன்ற காரியங்களை எப்படி செய்து கொண்டிருக்கிறோம் என்று சுய பரிசோதனை செய்து பார்ப்போம்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுதான், அவர் கட்டிய கிறிஸ்துவின் சபைதான் நம்மை பரலோகம் சேர்க்கும். தேடுவோம், ஆராய்வோம், கீழ்படிவோம். கிரேக்கர்களைப் போல சுய ஞானத்தைப் பெரிதாக நினைக்கவேண்டாம்.அடையாளம் அற்புதம் இன்று அவசியமில்லை. இயேசு நமக்காகத்தான் சிலுவையில் மரித்தார்.

அவர் தமக்குச் சொந்தமானதினாலே வந்தார். அவருக்குச் சொந்த மானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:11). இதுதான் வேதத்திலே மிகவும் சோகமான வசனம். இதைப் போன்றுதான் இன்றைக்கும் நமக்காக இரத்தம் சிந்தி மரிந்து சம்பாதித்த கிறிஸ்துவின் சபையில் நாம் இல்லையென்றால் அதே சோகம்தான் இயேசுவிடம் இருக்கும். அன்பான தேவன் தன் ஒரே குமாரனையே கொடுத்து நம்மை அவரோடு சேர்க்க எடுத்த மாபெரும் திட்டத்தை நாம் அற்பமாய் எண்ண வேண்டாம் தாழ்மையாய் கீழ்ப்படிவோம். ஆமென்.

வாலிபர் பகுதி

# தேவன் எல்லாச் சூழலுக்கும் ஏற்றவர்!

Dr. **ஏபில் நாயகம்**

பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். மீண்டும் இவ்விதழின் வழியாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மகிழ்ச்சி.... நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்று பவுலடியார் பிலிப்பின் 4:11 ல் சொல்வதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். இந்த சிந்தையைப் பற்றித்தான் இம்மாதம் தியானிக்கப் போகிறோம். இது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்க வேண்டிய சிந்தை. ஆனால், இச்சிந்தையை யாரும் எளிதில் பெற்றுவிட முடியாது. ஏன் என்ன செய்ய வேண்டும் என்று வேதத்தின் துணையோடு தேடுவோம்.

பவுலடியார் பெற்றுக்கொண்ட இந்த மேலான சிந்தை இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியமில்லை என்று பலர் எண்ணக் கூடும்.

மனரம்மியமாய் என்று தமிழில் எழுதப்பட்டுள்ள வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தின் **NKJV Verson** ல் **Content** என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் போதுமென்ற மனதுடன் இருப்பது அல்லது எந்நிலையிலும் மனநிறைவாய் இருப்பது ஆகும். நாம் சந்தோஷமாய் இருக்கும்போதும் நாம் நினைப்பது எல்லாம் நடந்தேறிக் கொண்டிருக்கும் சமயங்களிலும் மனநிறைவாய் இருப்பது சுலபம். அதற்காக எந்த ஒரு முயற்சியும் எடுக்கத் தேவையில்லை. இயல்பாகவே அச்சிந்தை வந்துவிடும். ஆனால், சோர்வான நேரங்களில், நினைத்தவைகள் நடக்காமல் போகும் தருணங்களில் மனநிறைவைப் பெற்றுக்கொள்ள நம்மால் முடிகிறதா? பெரும்பாலான நேரங்களில் பதில் இல்லை என்றுதான் இருக்கும். சற்று கடினம்தான். ஆனால், பவுலடியார் எந்நிலமையிலும் மனநிறைவாய் இருந்திருக்கிறாரே! அப்படியானால், அது சாத்தியமானது என்று தானே அர்த்தம், என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய என்னால் முடிகிறது என்று சொல்லி, கிறிஸ்துவை தன் பெலனாகச் சொல்கிறார்

எந்நிலையிலும் மனநிறைவாய் இருக்க வேண்டுமேயானால் தேவன் மீது அபாரமான நம்பிக்கை வேண்டும். நம் வாழ்வின் எல்லா அங்கங்களிலும் தேவனை நாம் மையப்படுத்த வேண்டும்.

நம் வாழ்வின் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் தேவன் சகலத்தையும் அவர் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று நாம் நினைக்க வேண்டும். சந்தோஷமான சூழ்நிலையோ சோர்வான சூழ்நிலையோ, நம் வாழ்வின் சூழ்நிலை எவ்வாறாக மாறினாலும் தேவன் மாறாதவர் என்கிற சிந்தையை நாம் பெற வேண்டும். மனநிறைவு என்பது **தேவன் எனக்கு போதும்** என்ற புரிதலின் வெளிப்பாடு ஆகும். அந்தப் புரிதல் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

தானியேல் புத்தகத்தின் 3-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் எந்நிலையிலும் மனநிறைவாகத்தானே இருந்தார்கள்? அப்படியானால், ஒரு உண்மை புலப்படுகிறது. தேவனை முழுவதுமாக புரிந்த மனிதர்களாலே, இந்த சிந்தையை பெற்றுக் கொள்ள முடிகிறது.

எனவே, தம் பக்கம் இருக்கும் சிந்தையை நாம் பழுது பார்த்து சரிசெய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏனென்றால், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்த ஒன்றாகவும் கடினமான சூழ்நிலைகளை எதிர் கொள்கிற ஒரு வாழ்க்கை யாகவும் இருக்கிறது. இதனால் பல நேரங்களில் நாம் மனநிறை வோடு இருக்க முடியாமல் போய்விடுகிறது. மனநிறைவோடு மனரம்மியமாய் வாழ சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தானியேல் 3ம் அதிகாரத்திலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

**நாடும், அரசாங்கமும் மறுத்தாலும் தேவன் தேவனே!**

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபது முழமான பொற் சிலையை உண்டு பண்ணி நிறுத்தினான். கீதவாத்தியங்கள் வாசிக்கப்படும் பொழுது அனைவரும் தாழ விழுந்து அந்தப் பொற் சிலையை வழிபட வேண்டும் என்று கட்டளையிட்டான். வழிபடாதவர்கள் அக்கினியிலே போடப்படுவார்கள் என்றும் கட்டளையிட்டான். பாபிலோனின் ராஜாவும் அவரின் அரசாங்கமும் மெய் தேவனின் மகத்துவத்தையும் வல்லமையையும் உணராமல், அவரைத் தேட மனதில்லாமல் விக்கிரகங்களை உண்டாக்கினார்கள்.

இது நாம் வாழும் சூழ்நிலைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்தவத்திற்கும், கிறித்தவர்களுக்கும் சாதகமில்லாத நாட்களில் நாம் வாழ்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் தேவ னுடைய பிள்ளைகள் இருப்பதும், தேவ மனிதர்கள் இருப்பதும் ஒன்றும் புதிதல்ல.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் மன நிலையை கவனிக்க தவறிவிடக்கூடாது. ராஜா பொற்சிலையை

நிறுவினாலும், அதை தாழவிழுந்து பணிந்து கொள்ள உத்தரவு வந்தாலும், அந்த உத்தரவுக்கு அந்த நாட்டின் மக்கள் அனைவரும் செவி கொடுத்து பணிந்தாலும், அது எங்களை பாதிக்காது என்ற நிலையை அவர்கள் பெற்றிருந்தார்கள். தாங்கள் சேவிக்கும் தேவன் இப்படிப்பட்ட காலத்துக்கும் தேவனாக இருக்கிறார் என்பதை புரிந்திருந்தார்கள். அவர்கள் விரும்பாத சூழலில் வாழ்ந்தாலும் மனநிறைவை அவர்கள் பெற்றிருந் தார்கள்.தேவன் அறிவார் என்றும் அவர் கட்டுப்பாட்டிற்குள் வைத் திருக்கிறார் என்றும் அவர் போதும் என்றும் அவர்கள் நினைத் தாலேயே அவர்களால் அந்த நிறைவோடு இருக்க முடிந்தது.

வாழ்க்கையின் எந்த சூழலிலும் தேவன் மாறாதவர் என்றும், தேவன் தேவனாகவே எப்பொழுதும் இருக்கிறார் என்கிற புரிதலோடும் நாம் இருக்க வேண்டும்.

**நாம் உறுதியான நம்பிக்கையோடு இருக்கும் பட்சத்தில், நமக்கு பிரச்சனைகள் வருமாயின், அப்போதும் தேவன் தேவனாகவே இருக்கிறார்.**

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, என்பவர்கள் நேபுகாத் நேச்சாரின் ஆணைக்கு கீழ்ப்படியாமல் போனதினால் அவர்களை அக்கினி சூளையிலே போட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அந்த நிலையிலும் அவர்களின் உறுதியை நாம் கவனிக்க வேண்டும். 3ம் அதிகாரம் 17,18 ல் ...விடுவிப்பர். விடுவிக்காமற் போனாலும் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது மில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வது மில்லை என்று கூறினார்கள். அக்கினி சூளையிலே தண்டனை கிடைக்கும் என்ற நிலை வந்த போதும், அவர்களின் உறுதியை நாம் கவனிக்க வேண்டும். அவர்களின் சூழல், தேவனின் தன்மையை கேள்விக்குறியாக மாற்றவில்லை. மாறாக, அவர் களின் நிலைப்பாடு தேவனின் தன்மையை உறுதியாக்கினது.

பிரியமானவர்களே! அப்படிப்பட்ட கண்ணோட்டம் நமக்கு வேண்டும். எந்த நிலையிலும் மனரம்மியமாய், மனநிறைவாய் இருக்க இந்த உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நம் வாழ்வின் சூழல் எவ்வாறாக இருந்தாலும் தேவன் மாறாதவர். தேவன் நிலையானவர். நம் வாழ்வின் தன்மையை கேள்விக் குறியாக்க முடியாது. தேவன் எப்பொழுதும் தேவனாகவே இருக்கிறார். இந்த புரிதலோடு நாம் வாழ முயற்சிப்போம். பவுலடி யாரைப் போல மனரம்மியமாய், மனநிறைவோடு வாழ்வோம். ஆமென்.

சிறுவர் பகுதி

# ஞானிகளுக்கு செவிகொடுத்தல்

Dr. *பிரெய்ஸி*

***ஹா***ய் குட்டீஸ்! தேவனுடைய கிருபையால் நீங்கள் எல்லாரும் நலமாயிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் சிறுவர்களுகான கட்டுரகளை தவறாமல் படிக்கிறீர்கள் என்றும் நம்புகிறேன். இந்த மாதம் நாம் எஸ்தர் மகாராணியைப் பற்றி பார்ப்போம்.

எஸ்தர் ஓர் அனாதைப் பெண்ணாக இருந்தாள். அவள் மொர் தெகாயால் வளர்க்கபட்டாள் (எஸ்தர் 2:7) எஸ்தருக்கு ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் கண்களில் தயவு கிடைத்தது (2:8) ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் அழைக்கபட்ட போது அவர்கள் விரும்பியதை கன்னிமாடத்தியிருந்து அரண்மனைக்குப் போக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் (2:13) அதனால் எஸ்தர் ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் ஆலோசனைக்கு செவிகொடுத்து அதன்படி செய்தாள் (2:15).

ராஜ அரண்மனையில் எப்படி உடை உடுத்தித் தன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதை அறியாத அனாதைப் பெண்ணாகிய எஸ்தர் அதைக் குறித்து அறிவுப் பெற்றிருந்த யேகாயின் ஆலோசனைக்கு செவி கொடுத்தாள்;. எஸ்தரைக் கண்ட எல்லாரிடத்திலும் அவளுக்கு தயவு கிடைத்தது. குறிப்பாக ராஜாவின் கண்களில் அவளுக்கு தயவு கிடைத்தது. அதன் விளைவாக எஸ்தர் மகாராணியாக முடி சூட்டப்பட்டாள் (2:17) பிள்ளைகளே அதைப்போலவே, நீங்கள் உங்கள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும், முதியவர்களுக்கும் செவிகொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் உங்களைவிட ஞானமுள்ளவர்கள்.

அருமையான பிள்ளைகளே! நீங்கள் ஞானமுள்ளவர்களாக மாற வேண்டுமென்றால், ஞானவான்களுக்கு செவிகொடுங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்கு பயம்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஞானமுளள்வர்களாக மாறவேண்டுமென்றால் தேவனுக்குப் பயந்து அவரோடு சரியான உறவைத்துக்கொள்ள வேண்டும். எஸ்தரைப் போல தேவனுக்குப் பயந்து முதியோர் மற்றும் பெற்றோர்களின் ஞானமான வார்த்தைகளைத் தேடி செவிகொடுக்க வேண்டும்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

# கர்த்தருக்குப் பயப்படுதல்

**சகோ. K. M. பிலிப் – பவானி**

**பி**ரியமானவர்களே! கர்த்தருக்கு பயப்படுகிற உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று உங்களோடு பகிர்ந்து கொள்ளும் தலைப்பு எல்லோருக்கும் பரிச்சயமான ஒன்று; எல்லோரும் விரும்புகின்ற, எல்லோருக்கும் கட்டாயம் தேவையான ஆசீர்வாதமான ஒன்றாகும். ஆம், கர்த்தருக்குப் பயப்படுதல் தான் ஆசீர்வாதத்தின் வித்தாகும். **அல்லேலூயா! கர்த்தருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளில் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்', என்றும், 'கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்** என்றும் வேதம் நம்மை வாழ்த்துகிறது [சங் 112:1 ; 119:1].

ஆனால், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை தன் வாழ்நாட்களில் கடைப்பிடிப்பதில் எச்சரிக்கை உணர்வு தேவ ஜனமாகிய அநேகருக்கு இல்லாமல் போனதால் பிதாவாகிய தேவன் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தைக் கொண்டு முழங்குகிறார் **...கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களில் இருக்கக்கடவது. எச்சரிக்கையாய் இருந்து காரியத்தை நடத்துங்கள் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து உண்மையோடும், உத்தம இருதயத்தோடும் நடந்து செய்ய வேண்டியது என்னவென்றால்** என்று உரத்த குரலில் உறுதியாய்எச்சரித்து கட்டளையிடுகிறான் [II நாளா 19:7,9]. இது அவனின் வாயின் சத்தமல்ல, அனுபவத்தின் வாயிலான சத்தமாகும். எந்த ஒரு பாடத்தையும் படித்துச் சொல்வதை விட அனுபவித்துச் சொல்லும் பொழுது அதன் உண்மைத் தன்மையை மற்றவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். இங்கு யோசபாத் **கர்த்தருக்குப் பயப்படுதலால் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும், மீறும் பொழுது கிடைக்கும் கொடிய தண்டனைகள் ஆகிய இரண்டு அனுபவங்களையும் எடுத்துரைக்கிறார். கருத்தாய் கவனித்து, கர்த்தருடைய கற்பனைகளின்படி நடப்போம். கர்த்தருக்குப் பயப்படுதலால் வரும் பலனையும் மகிமையையும் ஜீவனையும் அனுபவிப்போம்** [நீ 22: 4].

யோசபாத் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாயிருந்தபடியால் அவன் பெற்றுக்கொண்ட முதலாவது ஆசீர்வாதம். **கர்த்தர் யோசபாத்தோடு இருந்தார்** [II நாளா 17: 3] என்பதேயாகும். சர்வத்தையும் படைத்த சர்வ வல்லவரும், நித்தியமானவருமான பிதாவாகிய தேவன், அற்பனும் அநித்தியமுமான மனிதனோடு இருந்தார் என்பதே இவனுக்குக் கிடைத்த தைரியம்; மாபெரும் பாதுகாப்பு, பராமரிப்புமாகும். கர்த்தர் அவனோடிருந்ததால் யூதா கோத்திரத்தார் எல்லோரும் காணிக்கைகளை அவனுக்கு கொண்டு வந்தார்கள். அவனுக்கு ஐசுவரியமும், கனமும், மிகுதியாயிருந்தது. [17: 5] சொந்த ஜனத்தாரால் மட்டுமல்ல

எதிரிகளாகிய பெலிஸ்தராலும் காணிக்கை களையும், கனத்தையும் பெற்று வர வர பெரியவனானான் (17: 11, 12). இதைத்தான் ஒரு உறவுமில்லாதவனும், அடிமையும், சிறைக்கை தியுமான யோசேப்போடு கர்த்தர் இருந்து தேசத்திற்கே அதிபதியாக உயர்த்தப்பட்டான் என்று பார்க்கிறோம் (ஆதி 39, 40, 41). எசேக்கியா ராஜா குறித்து **கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகும் இடமெங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று** என்று பார்க்கிறோம். காரணம் 'அவன் கர்த்தரை விட்டுப் பின் வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்' என்பதேயாகும் ( **II** இரா 18: 5-7). இங்கு யோசபாத்தின் வாழ்க்கையிலும் கர்த்தர் அவனோடி ருந்ததால் தன் 25 ஆண்டுகால ஆட்சியிலும் எதிரிகளின் பயமின்றி செழிப்பான வாழ்க்கை வாழ்ந்தான். **கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப்படேன்,** (சங் 118:6). இதுவே நம் அனுபவமாக இருக்கட்டும்.

யோசபாத் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாயிருந்தபடியால் அவன் பெற்றுக்கொண்ட இரண்டாவது ஆசீர்வாதம், **கர்த்தர் அவன் கையில் ராஜ்ய பாரத்தைத் திடப்படுத்தினார்** என்பதாகும் (**II** நாளா 17: 5). இஸ்ரவேலின் 12 கோத்திரத்தில் இரண்டே கோத்திரங்களை உடையவனாயிருந்தும் 'யோசபாத் வரவர பெரியவனாகி, யூதாவிலே கோட்டைகளையும் பட்டணங்களையும் கட்டவும், பதினொரு லட்சத்து அறுபதாயிரம் பராக்கிரமசாலிகளான படைவீரர்களையும் உடையவனாகக் கர்த்தர் அவன் ராஜ்யத்தை ஸ்திரப்படுத்தினார் (**II**நாளா 17:12-19). எதிரிகள் அவனைக் கண்டு பயப்பட்டனர் அன்பானவர்களே! சஞ்சலமும், வருத்தமும், தோல்வியும், பயமும் நிறைந்த இப்பூலோக வாழ்க்கையில் நம் வாழ்க்கை திடப்பட, பலப்பட பயமற்றதாய் இருக்க நாம் யோசபாத்தைப் போல கர்த்தருக்குப் பயந்து அவர் கற்பனைகளின் படி நடக்கும்போது, **நல்ல மனுஷருடைய வழிகள் கர்த்தரால் உறுதிப்படும்,** நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்ட யூதர்களாகிய தானியேலும், மூன்று வாலிபர்களும் ராஜ அரண்மனையிலிருந்த போதிலும் விக்ரக ஆராதனைக்கடுத்த வைகளால் தங்களைத் தீட்டுப்படுத்த கூடாது என்பதில் உறுதியா யிருந்து கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு, கற்பனைகளுக்கு மட்டும் கீழ்ப்படிந்த இந்த நால்வரில் மூன்று பேர் ஜுவாலித்து எரியும் அக்கினிக்குள் தூக்கி எறியப்பட்ட போதும், தானியேல் சிங்க கெபிக்குள் வீசப்பட்டபோதும், எல்லாம் முடிந்தது என்ற நிலையில் தேவன் தேவதூதர்களை அனுப்பி அவர்களைத் திடப்படுத்தி உயிரோடு மீட்டெடுத்து மீண்டும் ராஜாவால் உயர்த்தப்பட்டு கனப்படுத்தப் பட்டார்கள்.. அவர்கள் காரியம் ஜெயமாக இருந்தது. ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனை தேவனுடைய ஆலயத்திலே தூணாகத் திடப்படுத்துவார் (வெளி 3: 12).

இத்தகு பண்புடைய யோசபாத்தைக் குறித்து தேவன் வெளிப் படையாய், **கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்**

**கொண்டது** என்று அவன் மனநிலையை வெளிப்படுத்துகிறார் (17:6). கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிவதில் யாருடைய கட்டாய மாயல்ல; முழு மனதோடு நானாகவே உற்சாகமாய் பிரியமாய் செய்தான் என்பதே அவனுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுத்தது. இந்த மன உற்சாகம் தான் தன் வாழ்வில் தேவ கற்பனைகளுக்கு முதலிடம் கொடுத்து அதன்படி செய்ய வைத்தது. அவன் பாகால்களை விக்கிரகங்களைத் தேடாமல் அவைகளை யூதாவை விட்டு அகற்றினான். தேவனுக்கே ஆராதனை செய்தான் (17: 3, 4). கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிவதன் மூலம் தான் பெற்ற ஆசீர்வாதத்தை தன் தேசத்தார் யாவரும் பெற்று அனுபவிக்கும்படி, ஆங்காங்கே நியாயாதிபதிகளையும், லேவியர்களையும், பிரபுக்களையும் நியமித்து தேவகட்டளைகளை உபதேசிக்கும்படி செய்தான் (17: 7, 9). தன் தேசத்து மக்களின் ஆத்துமா குறித்து, செழிப்பான வாழ்க்கை குறித்து யோசபாத்துக்கிருந்த இந்த அக்கரையும், கரிசனமும், அன்பும் நமக்குள் இருக்குமானால் நம்மைச் சுற்றிலும் உள்ள மக்களும் தேவபிள்ளைகளாகி தேவகரத்திலிருந்து நன்மைகளை நிச்சயம் அனுபவிப்பார்கள். நம் வாழ்க்கையும் –சமாதானமாய் செழிப்பாயிருக்கும். ஆபிரகாம், லோத்தின் குடும்பத்திற்காகத் தேவனிடம் மன்றாடி விண்ணப்பித்து அவர்களை அழிவினின்று விடுவித்தான். மோசே, யோசுவா போன்றவர்களும் இஸ்ரவேல் மக்களுக்காக தேவனிடம் போராடி ஜெபித்து அவர்களை பாலும் தேனும் ஓடுகிற கானானுக்குள் பிரவேசிக்கச் செய்தார்கள். ஆதித்திருச்சபையாரின் மனம் உற்சாகம் கொண்டதால் சிதறடிக்கப்பட்ட போதும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து திரளான மக்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள். பிரியமானவர்களே! நாமும் சபை கூடி வருதல், வேதம் வாசித்தல், ஜெபித்தல், ஊழியரோடு இணைந்து ஊழியத்தில் பங்கு பெறுதல் போன்ற ஆவிக்குரிய வாழ்க்கையில் மன உற்சாகத்தோடு பங்கு பெறுவோம். **நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்** (104:33) என்ற மன உறுதியோடு வாழ்வோம். நாம் எதைச் செய்தாலும் அதைக் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் செய்வோம். தேவ சமாதானம் நம் இருதயத்தை நிரப்பி காத்துக் கொள்ளும்.

இச்சிறப்பு மிக்க வாழ்க்கை வாழ்ந்த யோசபாத்தின் இரண்டாவது அனுபவத்தில் கர்த்தருக்குப் பயப்படுவதில் சற்று அசதியாய் இருந்ததால், எவனை விழுங்கலாமோ' என்று சுற்றித் திரியும் சாத்தான் இவனை தன் வலையில் சிக்கவைத்து சாவின் ஓரத்திற்கே இழுத்துச் சென்றுவிட்டான். என்னதான் ரத்த உறவாக இருந்தாலும், தேவனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட தேவனற்றவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரவேலின் ராஜா ஆகாப்பிடம் யூதாவின் ராஜாவாகிய தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்து வந்த யோசபாத் போனான். **ஆகாபோடே சம்பந்தங்கலந்தான்** (18: 1, 2) என்று பார்க்கிறோம். மேலும் **நான் தான்**

**நீர் என் ஜனம் உம்முடைய ஜனம்** என்று கர்த்தரை பகைக்கிறவர்களோடு, அவிசுவாசிகளோடு அநீதி செய்து. இருளில் வாழும் பேலியாளின் மக்களோடு இவன் ஐக்கியம் வைத்துக் கொண்டான் [**II** கொ 6: 14-18]. அவர்களோடு விருந்தில் புசித்து ஐக்கியமானான். மாயமான அன்புக்கு அடிமையானான். ஆகாபின் எதிரியை எதிர்ப்பதில் துன்மார்க்கன் ஆகாப்புக்கு துணை நின்றான். இப்போரில் தேவமனிதன் மிகாயாவால் தேவ எச்சரிப்புக் கிடைத்தும் தேவ எச்சரிப்புக்கு கீழ்ப்படிவதில் யோசபாத்தால் ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்துப் போனான். கர்த்தரைப் பகைக்கிற ஆகாப்போடு போரில் நின்றான். எதிரிகள் யோசபாத்தைக் கொன்று போடும்படி அவனை சூழ்ந்து நின்றார்கள். பலசாலி தைரியமிக்கவன், பயப்படாதவன் எப்பொழுதும் வெற்றியே கண்ட ராஜா யோசபாத் உயிருக்கு பயந்து கலங்கி கூக்குரலிட்டான் [18: 13]. இது எவ்வளவு கொடுமையான மனநிலை என்பதை பாருங்கள். இவன் கர்த்தரின் கற்பனைகளை மீறி, துன்மாக்கருடைய ஆலோசனையில் நடந்து, பாவிகளுடைய வழியில் நின்று, பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்கார்ந்ததால், சாத்தான் யோசபாத்தின் உயிருக்கே ஆபத்தைக் கொண்டு வந்தான். இதுதான் சாத்தானின் உறவால் வரும் கேடு. ஆம் நித்திய ஜீவனை இழந்து விடுவோம்.

இதில் நாம் கற்க வேண்டிய பாடம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் சாத்தானுக்கு இடம் கொடுத்தால் நித்திய ஜீவனை இழப்போம். இதில் யோசபாத், தேவனற்ற ஆகாபிடம் போனான் என்பதை கவனியுங்கள். அதாவது யூதாஸ், அனனியா, சப்பிராள் போன்று சாத்தானுக்கு **இடம் கொடுத்தான்.** இடம் கொடுத்தால் நாம் அவனுக்கு அடிமையாகி எல்லாவற்றையும் இழந்து விடுவோம். ஆகவே, **... உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்** என்ற நிலையில் நம்மை நிறுத்துவோம் [சங் 119: 11]. **கிறிஸ்து இயேசுவோடு ஐக்கியமாயிருப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்** [**I**கொ1:9]. கள்ள உபதேசங்களை விட்டு விலகுவோம். அசட்டையாயிராமல் எப்பொழுதும் விழிப்புடனிருப் போம். வழுவாமல் நம்மை காக்கும் தேவன் எப்பொழுதும் நம்மோடிருப் பார். யோசபாத்தின் கூக்குரலைக் கேட்ட தேவன் அவனுக்கு அனுசாரியாயிருந்தார். எதிரிகள் அவனை விட்டு விலகும் படி செய்தார் [18: 31]. யோசபாத் எருசலேமிலுள்ள தன் வீட்டிற்கு சமாதானத்தோடே திரும்பினான் [19: 1]. தேவனுக்கு முன் தன்னைத் தாழ்த்தி தொடர்ந்து கர்த்தருக்குப் பயப்பட்டு, அதன்படி செய்வதில் உறுதியாய் வாழ்ந்தான். அதை மற்றவர்களும் பின்பற்றி தேவ சமாதானத்தோடு வாழ உபதேசிப்பதில் உறுதியாயிருந்தான். **உத்தமனுக்கு கர்த்தர் துணை நீங்கள் திடமனதாயிருந்து காரியத்தை நடத்துங்கள்** என்றான் [19: 1]. இதுவே நம் அனுபவமாக இருக்க வாழ்த்துகிறேன். ஆமென்.

# வேதாகமம்– தேவனின் பரிபூரண புத்தகம்




தமிழில். **Bro. D. சாமுவேல் ராஜ்,** சத்தி

**ம**னிதனைப் பற்றிய சகல காரியங்களிலும், அவன் எவ்வாறு வாழவேண்டுமெனக் கூறுவதிலும் தேவனுடைய வார்த்தை தவறுவதில்லை. வேதாகமம் தேவனுடைய வசனமாக இருந்தால் மேற்சொன்னது உண்மையாக இருக்கவேண்டுமென்பது மட்டுமல்லாமல், உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவராசியைப்பற்றியும் வேதாகமம் நமக்குக் கூறும் ஒவ்வொரு விவரமும் துல்லியமாக இருக்க வேண்டும்.

விஞ்ஞானப் பூர்வமாக வேதாகமம் நம்பக்கூடியதாக இருக்கிறதா? அல்லது அதை மனிதன் தான் உண்டாக்கினான் எனக் காட்டும் தவறுகள் அதில் உள்ளனவா? வேதாகமத்தில் நாம் தவறுகளைக் காண நேரிட்டால், நாம் எப்படி வாழ வேண்டும் என அது கூறும்போது, அது கூறுவதை நாம் கடவுள் இருக்கின்றன? நம்பலாமா என நிச்சயமாகக் கேள்வி எழுப்பலாம். ஆனால், நாம் வேதாகமத்தில் தவறுகள் எதையும் காண முடியாவிட்டால், அது நிச்சயமாக தேவனுடைய வார்த்தைதான் என்பது தெளிவு. அப்படியானால், அதை நமது வாழ்விற்கு ஒரு வழிகாட்டும் சக்தியாக ஏற்றுக்கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

வேதாகமம் உண்மையா தவறா என்பதை ஒரு மனிதன் விஞ்ஞான ரீதியில் சோதித்துப்பார்க்க வித்தியாசமான பல வழிகள் இருக்கின்றன. இந்தக் குறிப்பிட்ட பாடத்தில், ஒரு துறையைப்பற்றி. அதாவது. மருத்துவத்துறையைப் பற்றி வேதாகமம் கூறும் சில விவரங்களை நாம் காண விரும்புகிறோம், புரதான மக்கள், மனித உடல் பற்றியும், வியாதி. சுகவீனம், மரணம் ஆகியவற்றை உண்டாக்குவது எது என்பது பற்றியும் எதை நம்பினார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே, பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டவற்றை, மோசேயும் அவர் காலத்திய மனிதர்களும், தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்குத் தெரிந்தவற்றை எழுதினார்களா அல்லது உண்மையிலேயே தேவனால் ஏவப்பட்டபடி சத்தியத்தை எழுதினார்களா என்பதை எளிதில் நாம் பரிசோதிக்கலாம். இவற்றைப் பற்றிய சில உதாரணங்களை நாம் பார்ப்போம்.

உங்களுடைய இரத்தம் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது? உங்கள் உடலில் உள்ள இரத்தம் முழுவதையும் காலி செய்துவிட்டால் என்னவாகும்? அநேகமாக, போதுமான அளவிற்கு நமக்கு இரத்தம் தேவை என்பதின் முக்கியத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். நாம் உயிரோடிருக்கத் தேவையான பிராண வாயுவை இரத்தம் அளிப்பதோடு, அந்தப் பிராணவாயுவை உடலின் சகல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நமது உடலில் வியாதியை எதிர்க்கும் சக்தியை வெள்ளை

இரத்த அணுக்கள் உண்டாக்குகின்றன என்பதை நாம் அறிவோம். என்றபோதிலும், மோசே வாழ்ந்த காலத்திய மக்கள், மனிதரிடம் ஏற்படும் கோளாறு களுக்கு அவனுடைய இரத்தமே காரணம் என நம்பினர். மனிதனுடைய இரத்தத்தில் சகலவிதமான கெட்ட ஆவிகளும் பிற பிரச்சனைகளும் வாசஞ்செய்தன என்று அவர்கள் நம்பினார்கள்.



எனவே, ஒருவன் சுகவீனமாக இருந்தால் அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியுமா? அவனுடைய இரத்தத்தை வெளியேற்றினார்கள். ஜியார்ஜ் வாஷிங்டனுக்கு ஏற்பட்டிருந்த வியாதியைக் குணப்படுத்த அவருடைய இரத்தத்தை வெளியேற்றினார்கள். அதன் விளைவாக அவர் மரணமடைந்தார்.

ஐக்கிய நாடுகளில் கூட வெகு சமீப காலம் வரையிலும் இரத்தத்தை வெளியேற்றுதல் சாதாரண ஒரு பழக்கமாக இருந்து வந்தது.



நாவிதர்களின் கடைகளுக்கு முன்பாக நீங்கள் காணும் நாவிதக் கம்பம். பழங்காலத்தில் நாவிதர்கள் முடிவெட்டுவது மட்டுமன்றி, நோய்களைச் சுகப்படுத்த மக்களின் இரத்தத்தை வெளியேற்றியும் பணம் சம்பாதித்தனர். இந்தப் பழக்கத்திற்கு முற்றிலுமாக மாறுபட்ட ஒன்றை வேதாகமத்தில் நாம் காண்கிறோம். லேவியராகமம் 17-ம் அதிகாரம், 11-ம் வசனத்தில், **மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது ....** என நாம் படிக்கிறோம். வசனம் 14-ல் **சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்குச் சமானம்...**' என பார்க்கிறோம். லேவியராகம் எழுத்தரின் கூற்றுப்படி, உயிருக்கு இரத்தம் அவசியமானது. அது எழுதப்பட்ட காலத்தில் நிலவிய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறுபாடாக இந்த அறிவிப்பு இருந்தது. அது எழுதப்பட்டதில் தேவனுடைய கரம் இருந்ததை மிகத் தெளிவாக நிரூபித்து காட்டுகிறது.

லேவியராகமம் 17-ம் அதிகாரம், 12, 14ம் வசனங்களில் மக்கள் இரத்தத்தைப் புசிக்கத் தடுக்கப்பட்டிருந்தனர் என்பதை நீங்கள் காணலாம். இரத்தத்தைப் புசிக்கக்கூடாதென அம்மக்களிடம் தேவன் ஏன் கூறினார் என நினைக்கிறீர்கள்? இன்று, ஒருவேளை, நம்மில் மிகச்சிலர் இதை ஏற்று நடக்கக்கூடும். ஆனால் இன்றுகூட பல நாடுகளில் பச்சை இரத்தத்தை ருசித்துச் சாப்பிடும் மனித ஜீவன்களைக் காண முடிகிறது. மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள் அவற்றின் இரத்தம் வழியாகவே தொற்றுகின்றன என்பதை நாம் நிச்சயமாக அறிவோம். அதன் காரணமாக, மிகவும் ஆபத்தான நோய் வரும் அபாயமின்றி, மனுக்குலம் இரத்தத்தைப் புசிக்க முடியாது.


இரத்தத்தின் மதிப்பைப் பற்றிய அறிவிப்புகள் சரியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சில நிலைகளில் தொற்று நோய்களை விலக்க மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறும் அறிவிப்புகளையும் நாம் காண முடிகிறது.

லேவியராகமம் 17:15ல் இவ்வாறு நமக்குச் சொல்லப்படுகிறது. தானாய் இறந்து போனதையாவது, பீறுண்டதையாவது புசித்தவன் எவனும், தன் ஆடைகளைத் தோய்த்து, தண்ணீரில் மூழ்கி, மாலை வரை காத்திருந்து, பின்பு சுத்தமாக தனது நண்பர்களைக் கானச் செல்வானாக. ஏன் இவ்வாறு சொல்லப்பட்டது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

தானாகவே எதுவும் இறந்து போனால், அதற்கு ஏதாவது பயங்கரமான நோய்கள் இருக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்பதையும், ஒருவன் அந்த உடலில் தீட்டுப்பட்டு, பின்னர் தன்னை முற்றிலுமாக கழுவாவிட்டால், அந்த நோய்கள் அவனைத் தொற்றிக் கொள்ளக்கூடும் என்பதையும் நம்மில் பலர் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு மனிதனிலிருந்து மற்றொருவனுக்குத் தொற்றும் அபாயத்தி லிருந்து அகன்றிட வேறு அநேக முறைகள் இருந்தன என்பதை அறிய வேண்டியதும் அவசியமாகும். லேவியராகமம் 15-ம் அதிகாரம். 19ம் வசனம் தொடங்கி, வியாதியான ஒரு மனிதனை விட்டு விலகி அகன்றிருக்குமாறு பல கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

லேவியராகமம் 13-ம் அதிகாரம், 15-ம் வசனத்தில், நோயால் பிடிக்கப்பட்டிருந்தவனை ஒதுக்கி வைக்கும் முறை ஏற்பட்டிருந்ததைக் காணலாம். தட்டம்மை, பொட்டலம்மை போன்ற வியாதிகளை யுடையவர்கள் அருகில் செல்லக்கூடாது என்பது ஏன் முக்கியம்? நம் அனைவருக்கும் அது புரியும். பிறருக்கு நோய் தொற்றாமல் தடுக்க அவர்களை தனி இடத்தில் வைப்பது மிக அவசியமாகும். என்ற போதிலும், ஐரோப்பியாவிலே பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் வரை இது நிரூபிக்கப்படாதிருந்தது. நோயுற்றவர்களை மக்கள் அணுகக்கூடாது என்றும், ஏனெனில் அந்நோய் அவர்களையும் தொற்றிக்கொள்ளும் என்றும் மக்களுக்குச் சொல்ல மோசேக்கு எப்படித் தெரியும்?



அடுத்து, கழிவுப் பொருட்களை என்ன செய்வது என்பது இது போன்ற பிரச்சனைக்கு மற்றும் ஓர் உதாரணமாகும். ஐரோப்பாவிலே, இருண்ட யுகத்தில் குப்பை கூளங்களை வீட்டில் சேகரித்து வைப்பதைத் தவிர்க்க அவை தெருவிலே கொட்டப்பட்டன. ஐரோப்பிய தெருக்களில் மனிதக் கழிவுப் பொருட்கள் குவிந்து கிடந்தன. இதன் விளைவாக, எலிகளும் மிருகங்களும் கொழுத்து வளர்ந்தன. இத்தகைய மூட பழக்கங்களால் கருப்பு பிளேக்கும் இன்னும் பிற நோய்களும் பரவலாயின.

எபிரெயர் நிருபம்

அதிகாரம் – 1

# இயேசுவானவர் தேவ தூதரிலும் மேலானவர்

**Bro. V. ஆசீர்வாதம்**, சென்னை

(சென்ற மாத தொடர்ச்சி...)

1:8–9 குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர் ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்:

**1:8–9 குமாரனை நோக்கி** :

சிங்காசனத்தை உடையவர் என்றும், செங்கோலை உடையவர் என்றும், ஆளுகை செய்ய உரிமையுள்ளவர் என்றும் சொல்லப் படுகிறது அவர் நீதியை விரும்புகிறபடியினாலும், அக்கிரமத்தை வெறுக்கிறபடியினாலும் தேவனுடைய தன்மையை வெளிப் படுத்துகிறார். ஆதலால் தேவனே அவருடைய தேவன் என்றும் அவருடைய தோழரைப் பார்க்கிலும், அவரை மகிழ்ச்சியினால் முடிசூட்டினார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய தோழர்கள் என்பது, ரோமர் 8:29ன்படி இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படி அழைக்கப்பட்ட சகோதரர்கள். எபி 2:11–12ல் உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்தேன். யோவான் 17–24ன்படி தேவன் இயேசுவானவருக்கு கொடுத்த மகிமையை அவருடைய சகோதரர்கள் பார்க்கும்போது, அது இயேசுவுக்கு மகிமையையும், பெருமையையும் உண்டாக்கும்.

1:10–12 கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர் வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது: அவைகள் அழிந்துபோம் நீரோ நிலைத்திருப்பீர் அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்: ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர் அப்பொழுது மாறிப்போம் நீரோ மாறாத வராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்று சொல்லியிருக்கிறது.

சங் :102:25–27

| கிரியைகள் | சிருஷ்டிக்கப்பட்டவை | சிருஷ்டிகர் |
| --- | --- | --- |
| வானங்கள், பூமி சக12:1 வானங்களை விரித்து பூமியை அஸ்திபாரப்படுத்தினார். | அழிந்துப்போகும். பழமையாய்ப் போகும். மாறிப்போகும். | நிலைத்திருக்கிறார். மாறாதவராய் இருக்கிறார். நீண்ட ஆயூளை உடையவராய் இருக்கிறார். |

இந்த வசனங்கள் தேவனுக்கு பயன்படக்கூடியதாயிருந்தாலும் இந்த இயேசுவானவரைக்கொண்டு தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினபடியினாலே, இந்த வசனங்கள் இயேசுவானவருக்கும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த வசனங்களில் இயேசுவானவர் சிருஷ்டிகராய் வெளிப்படுத்தப்படுகிறார். அவரால் சிருஷ்டிக்கப் பட்டவைகள் ஒழிந்து போனாலும், பழைமையாய்ப் போனாலும், மாறிப்போனாலும், இயேசுவானவர் சிருஷ்டிகராக மாறாதவராக நிலைத்திருக்கிறார். அவருடைய வருஷங்கள் அதாவது, ஆயுள் முடிவடைவதில்லை.

1:13 மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?

பரலோகத்தில் அநேகமாயிரம் தேவதூதர்கள் இருந்தாலும் அவர்களில் சிலர் பிரதான தூதர்களாகவும் இருந்தாலும், யாரும் தேவனுடைய சிங்காசனம் வரை உயர்த்தப்படவில்லை. இயேசு வானவர் உலகத்திற்கு வருவதற்கு முன்னே அவர் பரலோகத்தில் இருக்கும்போதே, தேவன் அவருக்கு தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரக் கூடிய வாக்குத்தத்தத்தை கொடுத்தார். இயேசுவானவர் பிறப்பதற்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுளுக்கு முன் பரலோகத்தில் நடந்த இந்த உரையாடலை பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார். சங். 110:1ல் இயேசுவானவர் தேவனுடைய சிங்காசனம் வரைக்கும் உயர்த்தப்பட்டப் பெரியவராயிருக்கிறார்.

1:14 இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

**1:14 தேவதூதர்கள் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்:**

தேவனுக்கு பயந்து நடக்கிறவர்களையும், இரட்சிப்பின் மகிமைக்குள் பிரவேசிக்கப் போகிறவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு தேவதூதர்களுக்கு உண்டு. சங். 34:7 கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழ பாளயமிறங்கி விடுவிக்கிறார். உதாரணம்: **II** இராஜா. 6:8–18 எலிசாவைப் பிடிக்கும்படி சீரியா நாட்டு ராஜா அனுப்பிய இராணுவம் குதிரைகளோடும், இராணுவ வீரர்களோடும் எலிசா இருந்த பட்டணத்தை சூழ்ந்து நின்றார்கள். அதைப்பார்த்த எலிசாவின் வேலைக்காரன் பயந்தான். அப்போது எலிசா, வேலைக் காரனை நோக்கி, பயப்படாதே அவர்களோடு இருப்பவர்களைப் பார்க்கிலும், நம்மோடு இருப்பவர்கள் அதிகம் என்றுச் சொல்லி ஜெபம்பண்ணி, கர்த்தர் அந்த வேலைக்காரனுடைய கண்களைத் திறக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். கர்த்தர் அவன் கண்களைத் திறந்தபோது, எலிசாவை சுற்றி ஏராளமான அக்கினிமயமான குதிரைகளும், இரதங்களும் நிற்பதைக் கண்டான். இவ்வாறு தேவன் தமக்கு பயந்தவர்களுக்கு தேவ தூதரைக்கொண்டு பாதுகாப்பு அளிக்கிறார் இந்த சிறியவர்களில் அவரவர்களுக்குரிய தூதர்கள் என் பரமபிதாவைத் தரிசிக்கிறார்கள் (மத். 18:10)

மேற்கண்டவைகளை நாம் பார்க்கும்போது, இயேசுவானவர் எவ்வளவு பெரியவராயிருக்கிறார் என்பதை அறிகிறோம்.

1. எபி. 1:2 அவர் சர்வத்துக்கும் சுதந்திரவாளி (வாரிசு) உரிமை உள்ளவராக இருக்கிறார்.
2. எபி. 1:2 அவரைக்கொண்டு உலகங்கள் உண்டாக்கப்பட்டன.
3. எபி. 1:3 அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருக்கிறார்.
4. எபி. 1:3 அவர் தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார்.
5. எபி. 1:3 சர்வத்தையும் தம்முடைய வார்த்தையாலே தாங்குகிறவராய் இருக்கிறார்.

6. எபி. 1:3 மனிதகுலத்திற்கு பாவ மன்னிப்பை உண்டாக்கினவராய் இருக்கிறார்.

7. எபி. 1:3 தேவனுடைய சிங்காசனம் வரைக்கும் உயர்த்தப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

8. எபி. 1:4 தேவ தூதரைப்பார்க்கிலும் மேன்மையானவராக இருக்கிறார்.

9. எபி. 1:5 தேவனுடைய குமாரனாய் இருக்கிறார்

10. எபி. 1:8–9 ஆளுகை செய்கிறவராயிருக்கிறார்.

11. எபி. 1:10–12 சிருஷ்டிகராயிருக்கிறார்.

12. எபி.1:13 தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

## தேவதூதர்கள்

1. எபி. 1:14 பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்கள்.

2. எபி. 1:6 இயேசுவானவரை தொழுதுக்கொள்ளும்படி கட்டளைப் பெற்றிருக்கிறார்கள்.

3. எபி. 1:7 காற்றுகளாக இருக்கிறார்கள்.

4. எபி 1:7 அக்கினி ஜூவாலைகளாக இருக்கிறார்கள்.

5. வெளி 19:17 சூரியனில் ஒரு தூதன் உட்கார்ந்துக்கொண்டு இருக்கிறான்.

6. வெளி 14:14 மேகத்தின் மேல் ஒரு தூதன் இருக்கிறான்.

7. வெளி 14:18 அக்கினியின் மேல் அதிகாரமுள்ள ஒரு தூதன்

8. வெளி 16:5 ஒருவன் தண்ணீரின் தூதனாயிருக்கிறான்.

9. வெளி 7:1 பூமியின் காற்றுகளையும் பிடித்திருக்கும் தூதர்கள்

# பக்திக்குரிய வாழ்வில் சோர்வா ?

Bro. பாண்டியன்

**தே**வனுடைய பிள்ளைகள் வசனத்திற்கு பயந்து என்னதான் விசுவாசமாகவும் வைராக்கியமாகவும் வாழ முயற்சித்தாலும், சில சமயம் இவ்வுலக சூழ்நிலை அவர்களைச் சோர்ந்து போகச் செய்வதுண்டு! அதற்கு ஒரு நல்ல உதாரணம் தான் தேவனுடைய மனுஷனாகிய எலியாவின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள். நானூற்று ஐம்பது பாகால் தீர்க்கதரிசிகளுக்கு எதிராக தைரியமாக, வைராக்கியமாக நின்று, **கர்த்தரே தெய்வம்** என்று நிரூபித்த போதும் அந்த தேச ராணி இவனைக் கொலை செய்ய முன்வந்த போது எலியா பயந்து போய் கர்த்தரை நோக்கி **நான் சாக வேண்டும்** என்று மனம் நொந்து வேண்டிக் கொண்டான் (1 ராஜா. 19:4) நமது வாழ்விலும் உறவுகளின் இழப்புகள், பொருளாதாரக் கஷ்டங்கள், அவமானம், நிந்தைகள், எதிர்பாராத விபத்துக்கள் மற்றும் எதிர்பார்த்தது நடவாத போது வரும் ஏமாற்றங்கள் போன்றவை நம்மைச் சோர்வடையச் செய்கின்றன.

அப்படிப்பட்ட சமயங்களில் நாம் எவ்வாறு சோர்ந்து போகிறோம் என்பதை வேத வசனங்களின் உதவியோடே பார்ப்போம். முதலாவது ஏசாயா 40:27-31 இதில் தேவ ஜனம் **என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது** என்றும் சோர்ந்து போவதாகக் காண்கிறோம். நாமும் சில சமயங்களில் இவ்வாறாகச் சோர்ந்து போவதுண்டு. ஆனால், அதற்கு பதிலாக தேவன் சொல்வதை கவனியுங்கள். உங்களுக்கு உதவி செய்வதில் நான் சோர்ந்து போவதில்லை. நீங்களோ என் உதவிக்குக் காத்திராமல் சோர்ந்து போகிறீர்கள் என்று கடிந்து கொள்கிறார். மாறாக தேவன் தமக்காகக் காத்திருப்பவருக்குச் சோர்வை அகற்றி புது பெலனைத் தருபவர் நம் தேவன் என்று வேதம் தெளிவாகச் சொல்கிறது. நம் உபத்திரவத்தை அறிந்து அவர் மனுஷரைப் போல நம்மை அற்பமாய் எண்ணாமல், தம்மை மறைத்துக் கொள்ளாமல் தம்மை நோக்கிக் கூப்பிடுகையில் அக்கறையோடே கேட்டருளுகிற தேவன் என்று (சங். 22:24) வாசிக்கிறோம். என்ன ஒரு அருமையான தெய்வத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்பதில் நாம் பெருமைக் கொள்ள வேண்டும். நிச்சயம் நம் நியாயம் நமக்குக் கிடைக்கச் செய்வார் என்கிறார் இயேசு (லூக்கா 18:7) மாத்திரமல்ல சோர்ந்து போன நம் இருதயங்களைத் தேற்றி ஸ்திரப்படுத்துவார் என்பதே உண்மை (2 தெச.2:16,17).

இரண்டாவதாக நாம் எப்படி சோர்ந்து போகிறோம் என்று பாருங்கள் ஏசாயா 49:14 - **சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார்; ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள்** நமக்கு நேரிடும் உபத்திரவங்களில் இவ்வாறாக எண்ணிக் கலக்கமடைகிறோம். என் தகப்பனும் தாயும் என்னைக் கைவிட்டாலும் என் தேவன் என்னைச் சேர்த்துக் கொள்வார் என்கிற தாவீதின் நம்பிக்கையை

நாம் கவனிக்க வேண்டும் (சங். 27:10) தம் ஜனங்களை தேவன் ஒருபோதும் மறப்பதில்லை. அதைப் புரிந்து கொள்ளவே நம்மைப் பார்த்து அவர் கேட்கிறார் ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் மறப்பாளோ ? மேலும் சொல்கிறார் அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை (ஏசாயா 49:15) பொருளாதாரக் கஷ்டங்களிலும் தேவன் நம்மைக் கைவிடுவதில்லை (எபி. 13:5)

மூன்றாவது பக்தியுள்ளவர்கள் இந்த உலகத்தில் மோசமானவர்கள் சந்தோஷமாகவும் செழிப்பாகவும் வாழ்கிறதைக் கண்டு சோர்ந்து போவது. எரே. 12:1 – ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன ? துரோகஞ்செய்து வருகிறவர்கள் சுகித்திருக்கிறதென்ன ? – இது ஆபத்தான சிந்தனை வண்டி ஓட்டுபவர்கள் வேடிக்கை பார்த்து விபத்தில் சிக்குவது போல தேவனுடைய பிள்ளைகள் இப்படி யோசிக்கக் கூடாது. ஏனெனில், அப்படிப்பட்டவர்களின் முடிவு அழிவு என்று வேதம் சொல்கிறது. (சங். 73:3–12) அதனால் அவர்களைக் குறித்த பொறாமைத் தேவையில்லை. மேலும், இதுபோன்ற விஷயங்களைக் கேள்வி கேட்பது களிமண் குயவனைக் கேள்வி கேட்பதை போன்றதாகும் (ரோமர் 9:20–23).

நான்காவதாக தேவன் மீது சந்தேகம் வருவது உதாரணமாக, தேவன் என்னைத் தள்ளி விடுவாரோ? அவருடையக் கிருபை அற்றுப் போயிற்றோ? வாக்குத்தத்தங்கள் ஒழிந்து போயிற்றோ ? இரக்கஞ் செய்ய மறந்தாரோ ? கோபத்தில் இருக்கிறாரோ ? என அடுக்கடுக்கான கேள்வி சந்தேகங்களை ஆசாப் எழுப்பி தொடர்ந்து அதைக் குறித்து தெளிவு வந்தபோது இது என் பெலவீனம், ஆனாலும் அவர் செய்த நன்மைகளை நினைவு கூருவேன் என்கிறார் (சங். 77:7–10) கடின மான சூழ்நிலைகளில் பயந்த சீஷர்களை அற்பவிசுவாசிகளே ஏன் சந்தேகப்பட்டாய் என்று இயேசு கடிந்து கொண்டதை நாம் அறிவோம்.


இறுதியாக நாம் பக்தியாய் இருப்பது வீணான காரியமோ ? என்று யோசித்து சோர்ந்து போவதாகவும். அதே ஆசாப் சங். 73 ல் நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம் பண்ணி, குற்றமில்லாமை யிலே என் கைகளைக் கழுவினேன். நான் தண்டிக்கப்பட்டு இருக்கி றேன் என்று புலம்பியபோதும் அடுத்து சொல்லும் போது இவ்விதமாய்ப் பேசுவேன் என்றால் உம்முடைய பிள்ளைகளின் சந்ததிகளுக்கு துரோகியாவேன் என்கிறார். சங். 73:13–15 சிலர் சபைக் கூடுதலை அற்பமாக எண்ணுகின்றனர் சரீரமுயற்சியே சிறந்தது எனத் தவறாக எண்ணுகின்றனர். ஆனால், தேவபக்தியே இவ்வுலக வாழ்வுக்கும், மறுமைக்குரிய வாழ்வுக்கும் பிரயோஜனமுள்ளது (1 தீமோ. 4:8).

அவபக்தியுள்ளவர்களை தண்டிக்க இயேசு ஆயிரம் ஆயிரமான தமது பரிசுத்தவான்களோடே வருகிறார். யூதா 1:15 ஆகவே, பரிசுத்தமாகுதலை தெய்வ பயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம் (2 கொரி. 7:1) தேவ தயவு நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

## தேவன் எங்கே இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுதல்!

Robert D. Rawson

**ச**ங்கீதம் 46,48,55 மற்றும் 73 போன்றவைகள் தாவீது ராஜா ஆழ்ந்து சிந்தித்துக் கேட்ட கேள்விகளை சுட்டிக் காட்டுகின்றன. இந்த அதிகாரங்களில் அவர் துன்மார்க்கர் தனக்கு ஏற்படுத்திய பிரச்சனைகளை மேற்கோள் காட்டுகிறார். இருந்தபோதிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் தனிப்பட்ட ரீதியில் தாவீதின் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்யாவிட்டாலும் கூட தேவனுடைய தொடர்ச்சியான அன்பையும், நீதியையும், நம்பிக்கையையும் மேற்கோள் காட்டுகிறார்.




தாவீதின் வாழ்க்கையின் துக்கமான வேளைகளில் தேவன் என்ன செய்து கொண்டிருந்தார் ? இதற்கான பதில் சங்கீதம் 73:17ல் இடம் பெற்றிருக்கிறது. இங்கே தாவீது துன்மார்க்கரின் முடிவைக் கவனித்து உணருமளவும் அது அவருடைய பார்வைக்கு விசனமாயிருந்திருக்கிறது. துன்மார்க்கர் ஏன் செழிக்கிறார்கள் என்பதை அறிவதற்காக தேவனுடையை பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறார். அங்கே அவருக்கு விடை கிடைத்திருக்கிறது, அங்கே தாவீது துக்கமான வேளைகளில் கூட தேவனுடைய நீதியான வழிகளை விட்டு, அவரை மறுதலிக்கவில்லை. ஆனால், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தபோது தேவன் துன்மார்க்கருக்கு செய்யவிருப்பதை புரிந்துகொண்டார்.

நாம் ஆராதனையில் பங்கெடுத்து, தேவனுடைய வார்த்தை நமக்கு போதிக்கப்படும்போது நாம் எத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொண்டாலும் நம்மீது அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை புரிந்துகொள்கிறோம். நம்மைச்சுற்றிலுமிருக்கிற துன்மார்க்கரைப் போல் சறுக்கலான இடங்களில் இருக்க விரும்புகிறோமா அல்லது தேவனுடைய போதனைகளில் நிலைத்திருந்து அவருடைய ஆசீர்வாதங்களில் நிலைத்திருக்க விரும்புகிறோமா?

✝

## 27 – ம் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் மற்றுமொரு பகுதி





**புதிய நூல்கள் வெளியீட்டின் போது...**



## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்














## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப்
பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள்
அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை TV**
செவ்வாய் - காலை 6:30 - 7:00 மணி
**நம்பிக்கை TV**
வெள்ளி - காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.